உ

கடவுள் துணை.

திருப்பழனியங்கிரி அறுமுகவர்

# திருநீற்றுப்பதிகம்.



திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதறாஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதறாஸ் என். சி.

உ

கடவுள் துணை.

பழனியங்கிரி அறுமுகவர்

# திருநீற்றுப் பதிகம்.

---

## ஆசிரிய விருத்தம்.

கொண்டகொண்டிட்டவெகு சொரூபங்களுக் கழகு கொடுக்கச்சமைந்தநீறு, கொடியவெண்ணுயிரஞ் சமணரைக் கழுவினிற் கொலைசெய்துகண்டநீறு, துண்ட கண்டப்படக் கொடூரவெஞ்சூரனுடல் துணிக்கவேல் தொட்டநீறு, சொல்லரியபூதப் பிசாசுபில்லிசூனியஞ் சுடரிட்டெரித்தநீறு, சென்றுபோற்கயிலைமலை யெடுத்தவன் கூன்முதுகுசெவ்வையாய் நிமிர்ந்தநீறு, சிவபத்தியில்லாத முழுமூடர்நெஞ்சந் திடுக்கிடக்கொடுத்தநீறு, அண்டரவ கண்டமுதல் வணங்கித்துதித்திட ஆண்மையாய்வந்தநீறு, அடியவர்க் கருள்கிருபை பொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே.

சம்பந்தராகவே தென்னவென்கூடலிற் சமணரை யழித்தநீறு, சகலகுருவாகை அரனுக்குவுபதேசந்தாளு யிரைத்தநீறு, நம்பின அடியவர்கள் வீடேறவினையோட நாதனுய்வந்தநீறு, நாற்பத்தெண்ணாயிரம்ரிஷிகள் முனி சித்தர்கள் நம்பியே பூசுநீறு, கம்பமதை யானைமாமுகவ னுக்கிளையவன் கருதியே தந்தநீறு, காலனிட தூதனை நாடாமலென்னாளும் காக்கவேவந்தநீறு, அம்பிகை திரி சூலி சுந்தரிசவுந்தரி அபிராமி வல்லிதந்த, அரியவர்க்க ருள்கிருபை பொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெ ண்ணீறே. (௨)

அரவங்கள் பூதங்கள் மிருகங்கள் பேய்களை அடை க்கவேயிட்டநீறு, அஷ்டபாக்கிய லட்சுமி யிஷ்டமுட னென்னாளு மகலாமலிட்டநீறு, இரவுபகல் மறவாமல் முருகர்திருநாமமே யிறைஞ்சித் தரித்தநீறு, எதிராளி நெஞ்சங் கலங்கிப்பயந்தோடயேற்கவேயிட்டநீறு, பரவு பலபிணிகளும் உரவுகெடு கோல்களும் பணிந்தோடவி ட்டநீறு, பஞ்சபாதகமுடன் மிஞ்சிடுவல்வினை பணிந்தி டவணிந்தநீறு, அரசனுடன்மந்திரி யாண்புலிவீரரு மதி வசியமானநீறு, அடியவர்க் கருள்கிருபை பொழிபழனி யங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. (௩)

இருப்பானதலமெலா மொன்றுந் துதிப்பதற் கீடேத்தஞ் செய்யுநீறு, எங்கெங்கிருந்தாலு மேத்திப்பணிந்திட வெதிராகநின்றநீறு, திருப்பரங் குன்றமுஞ் செந்தி கதிர்காமமுந் திருச்சோலைக்குகந்தநீறு, திருத்தணிசுவாமிமலை திருவேரகம்புகழ் செவவேளர்தந்தநீறு, பொருப்புகள் முடிதோறும் பதகமல முத்திரை புகழ்பெருகவந்தநீறு, பூசைசெய்யைவராற் றிருநாவினன்குடி போதிக்கவந்தநீறு, அருட்பாதநத்தியே நினைப்பவர்கள்நெஞ்சினில் அகலாதிருந்தநீறு, அடியவர்க்கருள்கிருபை பொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே (௪)

நூலைப்பகுந்திடை மாதர்க்குவேலாக நுதலிற்றறித்தநீறு, நூறுநூறுயிரமிமிசைவந்தாலுமொரு நொடியிற்றொலைக்குநீறு, வேலைக்கடிந்துவெகு சூரர்கள்மடியவே வெற்றிவேல் தொட்டநீறு, வேதனைச் சிறையிட்டு பிரணவத்துட்பொருள் விமலற்குரைத்தநீறு, வாலைப்பருவமாய் வயதுநூறுகவே வசியகரமானநீறு மாறாத செல்வமும் பேறுனவாழ்வுடன் வரிசைதரவந்தநீறு, ஆலவாய்ச்சொக்கருடன் ஆனந்தத் தாண்டவம் ஆடிச்செழித்தநீறு, அடியவர்க்கருள்கிருபைபொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. (௫)

ஓராறுசென்னியு மீராறுபுயமுமென் னுள்ளம்பதிந்தநீறு, ஓதுதமிழ்மதுரையி லூமைபெண்பேசவே உபதேசமானநீறு, காரணையமுகவனுக்கிளையவன் விராலிமலைக் காங்கேயன் தந்தநீறு, கயிலைமலையொருநொடியில் அரனைவலமாகவே காணவேவந்தநீறு பேரானவசுரருங் குன்றமும்வேலார் பொடிபடத்துணித்தநீறு, பொற்சந்திமலையிலுறை வள்ளியிடநாயகன் பொன்னடிவணங்குநீறு, ஆரோடுசெஞ்சடைக் கயிலைநாயகனுமைக் கழகுபெறவந்தநீறு, அடியவர்க் கருள்கிருபை பொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. (சா)

எத்தேசகாலமும் முத்தையரென்பவரேழைக்கிரங்குநீறு, எழிலானகிருத்திகை தவறுமனுஷ்டிக்க வின்பங்கள்தந்தநீறு, சிற்றிடைவள்ளியுடன் தினைப்புனங்காத்திடச் சிவசித்தாய் நின்றநீறு, சிற்றாறுவேடர்கள் சிவபத்தாகவே திருவுருக்கொண்டநீறு, முத்தமிழ்க்காகவே அருணகிரிநாதற்குமோட்சங்கொடுத்தநீறு, முப்பத்துமுக்கோடிதேவாதிதேவரும் முருகரெனவந்தநீறு, அத்தனருள்கந்தனார் நித்தம்விளைபாடவே யகலாமலிட்டநீறு, அடியவர்க்கருள்கிருபை பொழிபழனியங்கிரி அறுமுகவர்திருவெண்ணீறே. (எ)

வேதாளபூதப் பிசாசுபில்லிசூனிய மிரட்டித்துரத் துநீறு, வெண்டையந்தண்டையொடு கிண்கிணிசிலம்ப சைய வீரவேல்தொட்டநீறு, சூதானகளபமுலை வள்ளி யிடநாயகன் சுப்பிரமணியர் தந்தநீறு, தும்புருநாரதர் கிம்புருடர்போற்றித் துலங்கவேவந்தநீறு, ஓதுமுருகா வென்று உள்ளங்குளிரவே உற்றதுணையானநீறு, ஓம்ந மசிவாயகுருஞானதேசிகன் ஒழிவாகிவந்தநீறு, ஆதா ரமாகவே நெஞ்சினிலெப்பொழுது மறிவாகநின்றநீறு, அடியவர்க்கருள்கிருபை பொழிபழனியங்கிரி அறுமுக வர் திருவெண்ணீறே. (அ)

துஷ்டப் பிசாசு பிணிகிட வொட்டாமலே சுடரி ட்டெரித்தநீறு, சுற்றவேநிற்கின்ற அஷ்டதிசைபால ரும் சொல்லுமுன் வணங்குநீறு, வட்டமாய்ப்படர்மே கம் பதினெட்டு குஷ்டமும் வாராமற்பூசுநீறு, வாழா வம்வண்டுகடி சிலந்திதேள்விஷமெலாம் வாங்கவுமணிந் தநீறு, கொட்டமிடுசூரரை வெட்டிபலியிட்டுசெயங்கொ ள்ளவேவந்தநீறு, கூறமொழிநக்கீரர்மேன்மைபெற வேல் வாங்கி குன்றைப்பிளந்தநீறு, அஷ்டதிசைபதினாறு மு ட்கோண சட்கோண மறுபத்து நாலுகலையும், அடியவ ர்க்கருள்கிருபை பொழிபழனியங்கிரி அறுமுகவர் திரு வெண்ணீறே. (௯)

மருமலர்க் கமலத் துதித்தவன் கிளைவழி வாழ்வி க்கவந்தநீறு, மன்னுமாமுனி அகஸ்தியர் போகருடன் வழிகொள்ளவந்தநீறு, சரணமலரன்பனுங் குலாகுலத் திருக்கை தண்டமிட்டுதவுநீறு, சண்முகநதிமூழ்கி கிரி வலம்வந்தோர்க்கு சகலபிணி தீர்த்தநீறு, வறுமைபடுமெ ளியார்க்கு கொலைசெய்த யாவர்க்கும் வருவிரதமொத்த நீறு, வாழ்வுகிர்த்திகைசோம சுக்கிரவாரஞ்சஷ்டி வந்தி ப்போர்க்கருளுநீறு, அருமறைகள் பறவுகுரு சிவசம யந்தழைக்கவே யவதரித்தருளுநீறு, அடியவர்க்கருள் கிருபை பொழிபழனியங்கிரி அறுமுகவா திருவெண் ணீறே. (௰)

பத்துக் கவிதையு மனத்திற் றுதிப்போர்க்குப் பா க்கியந்தந்தநீறு, பரிவாகயெந்நாளுஞ் சரவணபவாவெ ன்ன பரிசுபெறவைக்கும்நீறு, கஸ்தூரிகுங்குமங் கமழ் வெள்ளிநாயகன் காங்கேயன் தந்தநீறு, கார்த்திகை நாள் தோன்றி வெற்றிவேலாயுதன் கடம்பனூர் தந்தநீறு, முத்துநவரத்தினத் தண்டைபணிபாதனன் முடிமேற்ற றித்தநீறு, முழுநீலமயிலேறி வந்துமுன் சத்துருசங்காரி யாய் அபிராமிவல்லிதந்த, அடியவர்க்கருள் கிருபை பொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. ()

வட்டசடாட்சரச் சரவணபவாவென்று மதியிற் றுதிக்கும்நீறு, வாதாடிவந்தெதிர்த்திட்ட பூதங்களை மார்பைப்பிளந்தநீறு, இஷ்டமுடன் சரியையொடுகிரியை யோகஞான மேற்கவேதந்தநீறு, இன்பாக வேகயிலை மலையேறிமோட்சத்தி விருக்கவே தந்தநீறு, எட்டுத்திசையதிர மயிலேறி மோட்சத்தி விருக்கவேதந்தநீறு, எட்டுத்திசையதிர மயிலேறியுலகைவலமிமைக்குமுன்வந்தநீறு, இமையவர் முனிவர்கள் தேவேந்திரனுதியிடரறக்களைந்தநீறு, அஷ்டதிசைபெற்றதீவேழுமீரேழுலகராசாளவந்தநீறு, அடியவர்க்கருள் கிருபை பொழிபழனியங்கிரி அறுமுகவர் திருவெண்ணீறே. (கஉ)

திருநீற்றுப்பதிகம்

முற்றிற்று.